Register Number

**Part III**

# புவியியல் / GEOGRAPHY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 150

## பகுதி - I

குறிப்பு : i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

### பிரிவு - அ

( மதிப்பெண்கள் : 15 × 1 = 15 )

I. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. ஊசியிலைக் காடுகள் ............................ சூழ்வாழிடம் என்று அழைக்கப்படுகின்றன.

2. ........................... உலகிலேயே மிகப் பழமையான சூழ்வாழிடம்.

3. பணித்திறன்பாட்டினைப் புரிந்து கொள்ள ............................ உதவுகின்றன.

4. மைய இடக் கோட்பாட்டை ............................ என்பவர் வெளியிட்டார்.

5. பொருட்களின் எடையும், ............................ பொறுத்தே போக்குவரத்துச் செலவு கணக்கிடப்படுகின்றது.

6. உலகின் செறிந்த விமானப் போக்குவரத்து ............................ மற்றும் ............................ நகரத்திற்கு இடையே நடைபெறுகின்றது.

7. தொலைத் தொடர்பில் செய்திகள் யாவும் ............................ ஆக வெளிப்படுத்தப்படுகின்றன.

8. தொலை நுண்ணுணர்வு நுட்பங்களைப் பயன்படுத்தி, அறுவடைக்கு முன்பாகவே பயிரின் உற்பத்தியினை மதிப்பிடும் ஒரு தேசிய இயக்கம் ............................ ஆகும்.

9. நன்னீரின் பெரும்பங்கு ............................ ஆக முடக்கப்பட்டுள்ளது.

10. மதுரை மாவட்டத்தில் ............................ மலையடிவாரத்தில் ............................ பள்ளத்தாக்கு மணல் குன்றுகளால் மூடப்பட்டுள்ளது.

[ Turn over

11. "நிலைமையை மோசமாக்காதே" என்பது சீரழிவிற்கான ........................ வழிகாட்டும் கொள்கையாக இருக்கின்றது.

12. சஹேல் ( Sahel ) என்பது மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு ........................ ஆகும்.

13. உயிரினப்பன்மை மற்றும் காட்டுத் தலங்களின் இழப்புகள் ................ சார்ந்தவையல்ல.

14. உலகில் பயன்படுத்தப்படும் நீரில் ........................ விழுக்காடு நீர்பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

15. இந்தியா ...................... ட்ரில்லியன் கன மீட்டர் நன்னீரினை ஒவ்வொரு வருடமும் பெறுகின்றது.

## பிரிவு - ஆ

( மதிப்பெண்கள் : 15 × 1 = 15 )

II. i) கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 16. | கேடு விளைவித்தல் | அ) | மீண்டும் செயலாற்றல் |
| 17. | மீளும் தன்மை | ஆ) | வெப்பப் பாலைவனம் |
| 18. | காலரா | இ) | சீர்குலைவு |
| 19. | இராஜஸ்தான் | ஈ) | வெள்ளம் |
| 20. | ஹெய்டி | உ) | தொற்று நோய். |

ii) கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 21. | கடலடிப் பரப்பு | அ) | அறுகோண வடிவமைப்பு |
| 22. | தொழிலக அமைவிட கோட்பாடு | ஆ) | ஒலி சுருக்குதல் |
| 23. | மார்க்ஸின் கருத்து | இ) | பெந்தாஸ் |
| 24. | குடியிருப்பு சந்தைகள் | ஈ) | வெபர் |
| 25. | ஒலி பரப்புதல் | உ) | முதலாளித்துவம் மற்றும் வளங்களின் சீர்கேடு. |

iii) கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 26. | உலகின் சக்தி வளம் | அ) | கனடா |
| 27. | அமுதாரியா ஆறு | ஆ) | இந்திய அரசாங்கம் |
| 28. | என்.ஆர்.எஸ்.எஸ் | இ) | 1988 |
| 29. | தட்டுப்பாடற்ற நீர் அளிப்பு | ஈ) | சூரியன் |
| 30. | [illegible] | உ) | [illegible] |

## பிரிவு - இ

( மதிப்பெண்கள் : $10 \times 1 = 10$ )

III. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

31. வட கோளார்த்தத்தில் துருவத்தைச் சுற்றி தொடர்ச்சியாகக் காணப்படும் சூழ்வாழிடம்

அ) குளிர்ப் பாலைவனம் ஆ) அயனக்கடல்கள்

இ) புல்வெளிகள் ஈ) மித வெப்பப் பகுதிகள்.

32. வளரும் நாடுகளில் மனிதத்திறனை முழுமையாக வெளிக்கொணர வாய்ப்பின்மைக்குக் காரணம்

அ) மக்கள்தொகை குறைவு ஆ) மூலங்களின் பற்றாக்குறை

இ) மக்களின் உழைப்பின்மை ஈ) அடிப்படைத் தேவைகளின் பற்றாக்குறை.

33. ஒவ்வொரு சேவை மையத்திற்கும் தேவையான குறைந்தபட்ச மக்கள்தொகை

அ) 0 — 50 ஆ) 100 — 200

இ) 200 — 300 ஈ) 300 — 400.

34. குறிப்பிட்ட பண்டத்தைக் கொடுத்து அதற்கு ஈடாக வேறு பண்டத்தை வாங்குவது

அ) பண்டமாற்று முறை ஆ) சிறப்பு எடுப்பு உரிமை

இ) டங்கல் ஒப்பந்தம் ஈ) வணிகச் சமநிலை.

35. இராணுவம் மற்றும் மருத்துவம் சார்ந்த சேவைகளுக்கு வல்லுநர்கள், நிபுணர்கள் விரைவாகச் சென்றடைய உதவும் சாதனம்

அ) விமானம் ஆ) ஹெலிகாப்டர்

இ) செயற்கைக் கோள் ஈ) இரயில்.

36. தேசிய வள மேலாண்மைக்காக இந்திய அரசாங்கம் அமைத்த தொகுதி

அ) ஆர்.ஆர்.எஸ்.எஸ்.சி. ஆ) ஐ.எஸ்.ஆர்.ஒ.

இ) என்.என்.ஆர்.எம்.எஸ். ஈ) எப்.ஏ.ஓ.

[ Turn over

37. அமேசான் மற்றும் காங்கோ ஆறுகள் பாய்கின்ற மண்டலம்

அ) மிதவெப்ப மண்டலம் ஆ) துருவ மண்டலம்

இ) புவியிடைக்கோட்டு மண்டலம் ஈ) அயன மண்டலம்.

38. 20 ஆம் நூற்றாண்டின் வெப்பமான ஆண்டு

அ) 1990 ஆம் ஆண்டு ஆ) 1920 ஆம் ஆண்டு

இ) 1970 ஆம் ஆண்டு ஈ) 1910 ஆம் ஆண்டு.

39. சீயிரா மன்றத்தின் தலைவர்

அ) தியோடர் ரோஸ்வெல்ட் ஆ) ஜான் மூர்

இ) ஜார்ஜ் புஷ் ஈ) இந்திராகாந்தி.

40. நுகர்பொருளை விற்பதற்காக ஏற்படுத்தும் பிணைப்பு

அ) இடு பொருள் பிணைப்பு ஆ) வெளிபடு பொருள் பிணைப்பு

இ) அத்தியாவசியப் பிணைப்பு ஈ) அத்தியாவசியமற்ற பிணைப்பு.

## பிரிவு - ஈ

(மதிப்பெண்கள் : 10 × 1 = 10)

IV. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

41. அ) புவியிடைக் கோட்டு மழைக்காடுகள், அயன மண்டல இலையுதிர்க் காடுகள் சேர்ந்ததொகுப்பு காடுகளின் சூழ்வாழிடங்களாகும்.

ஆ) புவியிடைக் கோட்டு மழைக்காடுகள், அயன மண்டல இலையுதிர்க் காடுகள் சேர்ந்ததொகுப்பு டைகா சூழ்வாழிடங்களாகும்.

இ) புவியிடைக் கோட்டு மழைக்காடுகள், அயன மண்டல இலையுதிர்க் காடுகள் சேர்ந்ததொகுப்பு சவானா சூழ்வாழிடங்களாகும்.

42. அ) ஆப்பிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவில் வறுமை, கல்வியறிவின்மை மோசமானப் பிரச்சனைகளாக இருந்து வருகின்றன.

ஆ) ஆப்பிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவில் வறுமை, சத்துணவின்மை மோசமானப் பிரச்சனைகளாக இருந்து வருகின்றன.

இ) ஆப்பிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவில் வறுமை, பற்றாக்குறை மருத்துவ வசதியின்மை மோசமானப் பிரச்சனைகளாக இருந்து வருகின்றன.

43. அ) இயற்கையிலிருந்து நேரடியாக வளங்களைப் பெறும் தொழில்கள் முதன்மை நிலைத் தொழில்களாகும்.

ஆ) இயற்கையிலிருந்து நேரடியாக வளங்களைப் பெறும் தொழில்கள் இரண்டாம் நிலைத் தொழில்களாகும்.

இ) இயற்கையிலிருந்து நேரடியாக வளங்களைப் பெறும் தொழில்கள் மூன்றாம் நிலைத் தொழில்களாகும்.

44. அ) ஒரு நாட்டிற்குத் தேவையான பொருளை ஏற்றுமதி செய்து விட்டு, அந்த நாட்டிடமிருந்து பெற்ற வருமானத்தைக் கொண்டு மற்றொரு நாட்டிடம் தனக்குத் தேவையான பொருளைப் பெற்றுக் கொள்ளுதல் உள்நாட்டு வணிகம் எனப்படும்.

ஆ) ஒரு நாட்டிற்குத் தேவையான பொருளை ஏற்றுமதி செய்து விட்டு, அந்த நாட்டிடமிருந்து பெற்ற வருமானத்தைக் கொண்டு மற்றொரு நாட்டிடம் தனக்குத் தேவையான பொருளைப் பெற்றுக் கொள்ளுதல் நேரிணை வணிகம் எனப்படும்.

இ) ஒரு நாட்டிற்குத் தேவையான பொருளை ஏற்றுமதி செய்து விட்டு, அந்த நாட்டிடமிருந்து பெற்ற வருமானத்தைக் கொண்டு மற்றொரு நாட்டிடம் தனக்குத் தேவையான பொருளைப் பெற்றுக் கொள்ளுதல் பல்கிளை வணிகம் எனப்படும்.

45. அ) காற்றில் கலந்து வரும் ஒலி அலைகளைக் கவர்ந்து பாடலாகவும், ஒலியாகவும் ஒலிக்கும் கருவி வானொலி.

ஆ) காற்றில் கலந்து வரும் ஒலி அலைகளைக் கவர்ந்து பாடலாகவும், ஒலியாகவும் ஒலிக்கும் கருவி தொலைக்காட்சி.

இ) காற்றில் கலந்து வரும் ஒலி அலைகளைக் கவர்ந்து பாடலாகவும், ஒலியாகவும் ஒலிக்கும் கருவி வீடியோ.

46. அ) ஒரு நிலைத் தடத்திலிருந்து, மற்றொரு நிலைத் தடத்தை இணைப்பது சந்திப்புகளாகும்.

ஆ) ஒரு நிலைத் தடத்திலிருந்து, மற்றொரு நிலைத் தடத்தை இணைப்பது வாகனங்களாகும்.

இ) ஒரு நிலைத் தடத்திலிருந்து, மற்றொரு நிலைத் தடத்தை இணைப்பது மேம்பாலங்களாகும்.

[ Turn over

47. அ) சுத்தமான நீர் மக்கள் அனைவருக்கும் கிடைக்க வகை செய்த நாடு மளாவி.

ஆ) சுத்தமான நீர் மக்கள் அனைவருக்கும் கிடைக்க வகை செய்த நாடு மலேசியா.

இ) சுத்தமான நீர் மக்கள் அனைவருக்கும் கிடைக்க வகை செய்த நாடு சூடான்.

48. அ) NDVI என்பது களப்பணி புள்ளி விவரமாகும்.

ஆ) NDVI என்பது இரண்டாம்நிலைப் புள்ளி விவரமாகும்.

இ) NDVI என்பது செயற்கைக்கோள் புள்ளி விவரமாகும்.

49. அ) தற்போது இந்தியாவில் மக்களால் விறுவிறுப்பாகப் பேசப்பட்டு வருவது ஆறுகளின் இணைப்பு.

ஆ) தற்போது இந்தியாவில் மக்களால் விறுவிறுப்பாகப் பேசப்பட்டு வருவது மண்ழநீர் அறுவடை.

இ) தற்போது இந்தியாவில் மக்களால் விறுவிறுப்பாகப் பேசப்பட்டு வருவது சுற்றுச் சூழல் பாதுகாப்பு.

50. அ) மனிதர்கள் சூழல் அறிவு முதிர்ச்சியைப் பெருமுயற்சியால் பெற வேண்டும் என்று கூறியவர் ஜான் மியூர் என்பவராகும்.

ஆ) மனிதர்கள் சூழல் அறிவு முதிர்ச்சியைப் பெருமுயற்சியால் பெற வேண்டும் என்று கூறியவர் ஹென்றி டேவிட் தொரு என்பவராகும்.

இ) மனிதர்கள் சூழல் அறிவு முதிர்ச்சியைப் பெருமுயற்சியால் பெற வேண்டும் என்று கூறியவர் தியோடர் ரூஸ்வெல்ட் என்பவராகும்.

## பகுதி - II

( மதிப்பெண்கள்: 15 × 2 = 30 )

V. *குறிப்பு :* i) ஒவ்வொரு வினாவிற்கும் சுருக்கமாக விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஏதேனும் **பதினைந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளி.

51. கடல்வாழ் இயற்தொகுதிகளில் மனித இனத்திற்கும், கடல்வாழ் உயிரினங்களுக்கும் முக்கியமான நான்கு இயற்தொகுதிகள் யாவை ?

52. கடலடிப் பரப்பிலுள்ள நகரும், நகரா உயிரினங்கள் யாவை ?

53. மக்கள்தொகைப் பரவல் சீரற்றிருக்க காரணங்கள் யாவை ?

54. மனிதரின் தரமான வாழ்க்கைக்குத் தேவையானவைகள் யாவை ?

55. மையக்கரு கிராமம் - வரையறு.

56. தலம் - வரையறு.

57. வலிமையற்ற பிணைப்பு - வரையறு.

58. மூன்றாம் நிலைத் தொழில்கள் என்றால் என்ன ?

59. வணிகச் சமநிலை என்றால் என்ன ?

60. வணிகம் - வரையறு.

61. போக்குவரத்து வலை என்றால் என்ன ?

62. கணணி தலைமுறைகளில் முதல் நான்கினைக் கூறு.

63. சூரியனோடு ஒத்திருக்கும் செயற்கைக்கோள் என்றழைக்கப்பட காரணம் யாது ?

64. தொலை நுண்ணுணர்வு மேடை-வரையறு.

65. வளர்ந்து வரும் நாடுகளில் நன்னீர் சார்பான இரண்டு சிக்கல்கள் யாவை ?

66. நிலச்சீர் குலைவு என்றால் என்ன ?

67. சீர்குலைவு என்றால் என்ன ?

68. மூலப்பொருட்கள் - உதாரணம் கொடு.

69. எரிசக்தி - குறிப்பு வரைக.

70. வன உயிரின பாதுகாப்பு என்பது யாது ?

## பகுதி - III

(மதிப்பெண்கள்: 6 × 5 = 30)

VI. *குறிப்பு :* i) ஒவ்வொரு வினாவிற்கும் 200 வார்த்தைகளில் விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஏதேனும் **ஆறு** வினாக்களுக்கு மட்டும் விடையளி.

71. மிதவெப்ப மண்டல புல்வெளி சூழ்வாழிடம் குறித்து எழுது.

72. மார்க்ஸின் மக்கள்தொகை உட்கருத்தை விவரி.

73. மின்னியல் ஆதாரங்கள் - குறிப்பு வரைக.

74. செயற்பாட்டு பிணைப்பினை விளக்குக.

75. வணிகப் பொறி - குறிப்பு வரைக.

76. டி.ஜி.வி. இரயில் குறிப்பு வரைக.

77. தேசிய வள தகவல் தொகுதியின் செயல்பாடுகளைக் குறித்து எழுதுக.

78. உலகில் காணப்படும் நீர் பரவலைக் குறிப்பிடுக.

79. பாலைவனமாதலை விவரி.

## பகுதி - IV

VII. *குறிப்பு :* i) எல்லா வினாக்களுக்கும் விரிவாக விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) பிரிவு 'அ' விலிருந்து ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடையளி.

### பிரிவு - அ

( மதிப்பெண்கள் : 3 × 10 = 30 )

80. மால்தஸின் மக்கள்தொகைக் கோட்பாட்டினை விளக்கமாக எழுதுக.

81. வணிகத்தில் புவியியல் காரணிகளின் பங்கினை விவரி.

82. வெபரின் தொழிலகக் கோட்பாட்டினை படத்துடன் விவரி.

83. நீர் மாசடையும் முறைகளை விளக்குக.

84. உலக குடிநீர் பற்றாக்குறையை விவரி.

### பிரிவு - ஆ

( மதிப்பெண்கள் : 1 × 10 = 10 )

85. பாலைவன சூழ்வாழிடங்களை கொடுக்கப்பட்டுள்ள உலகப்படத்தில் குறித்து, ஏதேனும் ஒரு பாலைவனத்தை விவரி.

*அல்லது*

1999 இல் துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைப் பற்றி எழுதி, நிலநடுக்கப் பகுதிகளை கொடுக்கப்பட்டுள்ள உலகப்படத்தில் குறிக்கவும்.